தினத்தந்தி
சென்னை 20-2-2020

தேசிய சீனியர் பால்பேட்மிண்டன்:

# தமிழக பெண்கள் அணி வெற்றி

சென்னை, பிப்.20-
65-வது தேசிய சீனியர் பால்பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள செயின்ட் ஜோசப்ஸ் என்ஜினீயரிங் கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில் 2-வது நாளில் நடந்த பெண்கள் அணிகளுக்கான போட்டியில் தமிழக அணி 35-8, 35-12 என்ற நேர்செட்டில் பீகாரை எளிதில் தோற்கடித்தது. மற்ற ஆட்டங்களில் புதுச்சேரி, மராட்டியம், பஞ்சாப், மேற்கு வங்காளம், கர்நாடகம், கேரளா, உத்தரகாண்ட் அணிகள் வெற்றி பெற்றன. ஆண்கள் அணிகளுக்கான போட்டியில் புதுச்சேரி அணி 35-21, 35-25 என்ற நேர்செட்டில் அரியானாவை வீழ்த்தியது. மற்ற ஆட்டங்களில் கேரளா, பீகார், சத்தீஷ்கார், இந்தியன் ரெயில்வே, பஞ்சாப், ஒடிசா அணிகள் வெற்றியை ருசித்தன.

20.02.20.